# சேனலின் குளோபல் சிஇஓ திருமதி லீனா நாயருடன் பிரதமரின் சந்திப்பு

ஜூலை 14, 2023

பிரெஞ்ச் சொகுசு பேஷன் ஹவுஸ் நிறுவனமான சேனலின் குளோபல் சிஇஓ திருமதி லீனா நாயரை பிரதமர் திரு நரேந்திர மோடி 14 ஜூலை 2023 அன்று பாரிஸில் சந்தித்தார்.

திருமதி நாயரின் வெற்றிக்காக பிரதமர் வாழ்த்து தெரிவித்ததோடு, இந்தியாவில் முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் ஒத்துழைப்பு திறனை ஆராய சேனலை அழைத்தார்.

இந்தியாவில் கைவினைப் பொருட்கள், காதி மற்றும் கைவினைஞர்களின் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதங்கள் கவனம் செலுத்தின.

**பாரிஸ்**
**ஜூலை 14, 2023**